செய்திக்குறிப்பு எண் : 1

நாள் : 14.1.2009

கா. ராமச்சந்திரன்
கதர் துறை அமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 14-01-2009

# பனைத்தொழிலாளர்களுக்கு ஓர் நற்செய்தி

இந்த புத்தாண்டு தினத்தன்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பனைத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற அரசிடம் சட்டப்பூர்வமாக உரிமம் பெற்று, தொழிலாளர்கள் இறக்கி கொண்டுவரும் மருத்துவ குணங்களும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்த பதனீரை பனைத் தொழில் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அனைத்து மாவட்ட சம்மேளனங்கள் மற்றும் மாநில சம்மேளனத்தின் மூலமும் ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவு சங்கங்களில் தனி அலுவலர்களின் மூலமும் தற்போது கொள்முதல் செய்யப்படும் பதனீரின் விலை லிட்டர் 1–க்கு ரூ.3.50.லிருந்து முதற்கட்டமாக 100 சதவீதமாக உயர்த்தி லிட்டர் 1–க்கு ரூ.7.00 வீதம் கொள்முதல் செய்யப்படும் என்று தமிழக அரசு உத்திரவிட்டுள்ளது. மேலும் தொழிலாளர்கள் கொண்டுவரும் அனைத்து கருப்பட்டியையும் சம்மேளன தனி அலுவலர்களால் கொள்முதல் செய்யப்படும் என்றும் தமிழக அரசு உத்திரவிட்டுள்ளது.

அரசு பனைத் தொழிலார்களின் வாழ்வு வளம்பெற மேலும் பல நல்லத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த முனைந்து கொண்டிருக்கும் பொழுது சிலர் ஜனவரி–21 தேதி கள் இறக்கும் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். இது சட்ட விரோதமாகவும் பனைத் தொழிலாளர்களின் நலத்தை சீர்குலைக்க எடுக்கும் அவர்களது செயல்களுக்கு தொழிலாளர்கள் யாரும், துணை போகவேண்டாம் என்று அரசு கேட்டுக்கொள்கிறது. எனவே பனைத் தொழிலாளர்கள் அனைவரும் மற்றும் இதன் தொடர்புடைய அமைப்புகளும் அரசு எடுக்கும் நல்ல நோக்குடைய திட்டத்திற்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

(கா.ராமச்சந்திரன்) 14/1/2009

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை 9